# அகிம்சை பற்றி மார்ட்டின் லூதர் கிங் கூறியவை அனைத்தும் சரியே என உலகம் எப்படி நிரூபித்துக்கொண்டிருக்கிறது!

## How the world is proving Martin Luther King right about nonviolence

Erica Chenoweth and Maria J. Stephan

Washington Post, January 18, 2016
Translation: March 2018

# TRANSLATOR'S NOTES

**அகிம்சை பற்றி மார்ட்டின் லூதர் கிங் கூறியவை அனைத்தும் சரியே என உலகம் எப்படி நிரூபித்துக்கொண்டிருக்கிறது!**

- எரிகா செனோவெத் & மரியா ஜே. ஸ்டீஃபன்,

ஜனவரி 18, 2016

பெண்கள் உரிமைக்கான அகிம்சை வழிச் செயல்பாடுகளுக்காக ஏமன் சமூக சேவகர் தவக்கால் கார்மன் (வலதுபுறம் வெள்ளை முக்காடு அணிந்திருப்பவர்) நோபல் பரிசு வென்றார். (அனுப்பியவர்: புகைப்படக் கலைஞர் சுதர்ஸன் ராகவன்)

***“சுதந்திரத்தை அடைய ஒடுக்கப்பட்ட மக்களிடமிருந்த ஆயுதங்களிலேயே மிக வலிமையான ஆயுதம் அகிம்சை வழி எதிர்ப்புதான் என்ற அசைக்க முடியாத எண்ணத்துடனே நான் இந்தியாவை விட்டு வெளியேறினேன்,” என்று மார்ட்டின் லூதர் கிங் ஜூனியர் கூறியதாகச் சொல்பவர் அவரது வாழ்க்கை வரலாற்றை எழுதிய எழுத்தாளர் க்ளேபோர்ன் கார்ஸன்.***

2011ஆம் ஆண்டு முதல் பல்வேறு சச்சரவுகளை இவ்வுலகம் சந்தித்துள்ளது. பல ஆயுதக் கிளர்ச்சிகள் மத்தியக் கிழக்கு நாடுகளிலும், சாஹெல் மற்றும் தெற்காசியாவிலும் பரவலாகக் காணப்பட்ட போதிலும் தத்தமது துயர்களைத் துடைக்க முதன்மையான வழியாக வன்முறைசார் குடிமை மோதல்களை மக்கள் கையாளவதில்லை. மாறாக, டூனிஸ் முதல் தாஹ்ரீர் சதுக்கம் வரையிலும், ஜூக்கோட்டி பார்க் முதல் ஃபெர்கூஸன் வரையிலும், பர்க்கினோ ஃபாஸோ முதல் ஹாங்காங் வரையிலுமுள்ள உலகளாவிய இயக்கங்கள் மகாத்மா காந்தி, மார்ட்டின் லூதர் கிங் மற்றும் உள்ளூரிலும் வெளிநாட்டிலும் நாள்தோறும் காணும் செயல்பாட்டாளர்களிடமிருந்து தாம் கற்றுக்கொண்டுள்ள பாடங்களாலேயே மாற்றத்துக்காகக் குரல் கொடுக்கின்றனர்.

வேலைநிறுத்தம், புறக்கணிப்பு, எதிர்ப்பு மற்றும் பிறவகைச் செயல்கள் அடங்கிய அகிம்சை வழி எதிர்ப்பு நடவடிக்கைகள் மூலமாக எதிராளிகளை எதிர்க்க ஆயுதமேந்தாத மக்கள் மேற்கொள்ளும் கூட்டு முயற்சிகளையும் (காந்தியும் லூதர் கிங்கும் போதித்தவை) விமரிசனம் செய்பவர்களும் உண்டு. குடிமைச் சமூகத்தின் எதிர்ப்பு எப்படியிருக்கும் என்பதைத் தவறாகப் புரிந்துகொண்டவர்களும் வலுவான எதிரியை எதிர்க்கும் முயற்சியில் ஒடுக்கப்பட்ட மக்களின் ஒன்றிணைந்து போராடும் திறனைச் சந்தேகிப்பவர்களும் இவ்வகை விமர்சகர்களில் அடங்குவர். ஒட்டுமொத்த அடக்குமுறை, திண்ணமான அதிகாரத்தை எதிர்க்கும் அகிம்சை வழியின் திறன் குறித்த கேள்விகளும் சவால்களும் ஒவ்வொரு புதிய இயக்கம் உதயமாகும்போதும் எழுவதுண்டு. 2011இல் இக்கேள்விகளை ஆராயும் வகையில் ஒரு புத்தகத்தை வெளியிட்ட நாங்கள் கண்டறிந்த எதிர்பாராத உண்மை என்னவென்றால் பதவியில் இருக்கும் தேசியத் தலைவர்களை அகற்ற (அ) பிராந்திய விடுதலைக்கான முயற்சியில்

வன்முறைப் போராட்டங்களை விட அகிம்சை வழி எதிர்ப்புப் பிரச்சாரங்களே இரு மடங்கு அதிக வெற்றிகளைத் தந்துள்ளன என்பதுதான்.

பலருக்கு இது சரியில்லாத கூற்றாகத் தோன்றலாம்; ஆனால், தகவல்களை ஆராய்கையில் அகிம்சை வழி எதிர்ப்புப் பிரச்சாரங்கள் எதிரிகளின் இதயங்களை உருக்கி அதனால் வெற்றி பெற்றதாகத் தெரியவில்லை. மாறாக, அகிம்சை வழிப் போராட்டங்கள் மக்களின் பங்கேற்பை அதிக அளவில் ஈர்க்கும் வலிமை உடையதாக இருந்ததனாலேயே வெற்றி அடைந்துள்ளன. ஆயுதமேந்திய போராட்டத்துடன் ஒப்பிடுகையில் அகிம்சை வழிப் போராட்டங்கள் சராசரியாக 11 மடங்கு அதிக பங்கேற்பாளர்களை ஈர்த்துள்ளன; எதிரி அரசுகளிடையே பெரும் அளவிலான அதிகாரப் பங்கீடு ஏற்படுவதற்கும் இதுவே காரணமாகும். சமூகத்தின் பல்வேறு பிரிவின மக்கள் பங்கேற்கும் இப்பெரும் போராட்டங்கள் சீர்திருத்தவாதிகளைத் தேர்ந்தெடுத்து வலுசேர்ப்பதுடன் சமரசம் செய்துகொள்ளாதவர்களை ஆதரவு சக்திகளிடமிருந்து பிரித்தும் விடுகின்றன. அத்தகைய மக்கள் பங்கேற்பு அகிம்சையைச் சார்ந்திருக்கும்போது பழிவாங்கப்படுவோமென்ற பயமின்றி போராட்டத் தலைமைக்கு அரசுத் தலைமையே ஆதரவளிக்கும் நிலையும், பாதுகாப்புப் படையினர், பொருளாதாரப் பெரும்புள்ளிகள் மற்றும் குடிமை அரசு அதிகாரிகள் அரசுக்கெதிராகத் தன்வசம் சேரும் நிலையும் ஏற்படுகிறது.

வேறு விதமாகக் கூறினால் அகிம்சை வழி எதிர்ப்பு பயனுள்ளதாக இருக்கக் காரணம் பிறரை மாற்றும் அதன் சக்தி மட்டுமன்றி அதன் ஆக்கபூர்வ இயைபு மற்றும் நிர்ப்பந்திக்கும் திறனே காரணமாகும். இந்த சித்தாந்தத்தைத்தான் ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் இன்ஸ்டிட்யூஷனின் நிறுவனர் ஜெனி ஷார்ப் அவர்கள் பல தலைமுறைகளாகச் சொல்லிக்கொண்டு வந்துள்ளார். எல்லா விதமான அகிம்சை வழிப் பிரச்சாரங்களும் வெற்றியடைவதில்லை. ஆனால், அவை தோல்வி அடைந்தபோதெல்லாம் வன்முறை எழுச்சிகள் வெற்றியடைந்திருக்கும் என்று சொல்ல முறையான ஆதாரங்களும் நமக்குக் கிடைக்கவில்லை.

இது நடந்தது 2011இல்; நாம் இப்போதிருப்பதோ 2016இல் (கட்டுரை எழுதப்பட்ட காலம் - மொழிபெயர்ப்பாளர்). அகிம்சை வழி எதிர்ப்பு பற்றி இந்த ஐந்து ஆண்டுகளில் நாம் அறிந்து வைத்திருப்பது என்ன? அரசியல் அறிவியல் தொடர்பான முக்கியமான சோதனை முடிவுகள் சிலவற்றை நாம் கீழே தந்துள்ளோம்; அகிம்சைச் செயல்பாட்டைச் சந்தேகத்துடன் பார்க்கும் சிலருக்கு இவற்றில் சில ஆச்சரியம் தருவதாகவும் இருக்கலாம்.

1. **அகிம்சை வழிப் பிரச்சாரங்கள் சகஜமான நிகழ்வுகளாக மாறிவருகின்றன.**

வரலாற்றின் அமைதியற்ற காலகட்டத்தில் வாழ்ந்துகொண்டிருக்கிறோம் என்று நீங்கள் நினைத்தால் அது சரிதான். ஆனால் அமைதியின்மையின் வகைதான் இக்காலகட்டத்தின் தனித்துவமான தன்மை. மேஜர் எபிசோட்ஸ் ஆஃப் கண்டென்ஷன் திட்டம் (டெனெவர் பல்கலைக்கழகப் பேராசிரியர் எரிகா செனோவெத்தின் தகவல் களஞ்சியத் திட்டம்) சொல்வது

என்னவெனில் உலகந்தோறும் அகிம்சை வழி எதிர்ப்புப் பிரச்சாரங்கள் சர்ச்சையான செயல்பாட்டுகளுக்கான எடுத்துக்காட்டாக ஆகிவிட்டன. பல்வேறு ஆதாரங்களின் மூலம் தகவல் திரட்டப்பட்டு கணக்கில் எடுக்கப்படும் NAVCO டேட்டா திட்டம் இம்மாதிரிப் பாணியைக் குறிக்கிறது; எதிர்ப்பு குறித்த பல்வேறு டேட்டாக்களும் இதையே சொல்கின்றன. போரில் 1000 பேருக்கு மிகாமல் கொல்லப்பட்ட சம்பவங்களை எடுத்துக் கொண்டால் வன்முறை எழுச்சியின் எண்ணிக்கை 1970களிலிருந்து குறைந்துவருவதும் அகிம்சை வழி எதிர்ப்புப் பிரச்சாரங்கள் மிகவும் அதிகரித்திருப்பதும் தெரியவரும். அதிக அளவிலான எதிர்ப்புக்களை இப்புள்ளிவிவரங்கள் குறிக்கின்றன; பதவியிலிருக்கும் தேசிய அரசைத் தூக்கி எறிவது (அ) பிரிவினை சுதந்திரம் மூலம் பிராந்தியத்தைத் தனிநாடாக்குவது (அ) வெளிநாட்டு ராணுவ முற்றுகையை (அ) காலனி ஆதிக்கத்தை முறியடிப்பது அவற்றின் இலக்குகள என்றும் தெரிகிறது.

- அகிம்சை வழி: 224
- வன்முறை: 235

1990-1909

1910-1919

1920-1929

1930-1939

1940-1949

1950-1959

1960-1969

1970-1979

1980-1989

1990-1999

2000-2010

2010-2015




தொண்ணூறுகள் முழுமையிலும் இருந்ததைவிட அதிக எண்ணிக்கையிலான, 2000-களில் இருந்ததற்குச் சமமான எண்ணிக்கையிலான, அகிம்சை வழிப் பிரச்சாரங்களைத் தற்போதைய தலைமுறையின் முதல் 5 ஆண்டுகளிலேயே பார்த்துவிட்டோம். தற்போதைய தலைமுறையே விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளச் சிறந்த தலைமுறையாகும்.

**2. பரவலாக இருந்தாலும் அகிம்சை வழி எதிர்ப்புப் பிரச்சாரங்களின் விகிதம் குறைந்துவிட்டது.**

இவ்விதம் அதீதமாக அதிகரித்த அகிம்சை வழிப் பிரச்சாரங்களில் நாம் கற்றுக்கொள்ள ஒரு விஷயமும் ஒளிந்துள்ளது. அகிம்சை வழிப் பிரச்சாரங்களின் வெற்றி விகிதம் 1990களில் உச்சம் தொட்டபோதும் அவ்விகிதம் தற்போதைய தலைமுறையில் மிக்வும் குறைந்து போய்விட்டது.




இதற்குச் சில காரணங்கள் இல்லாமலில்லை. அரசின் எதிரிகள் பலவற்றைக் கற்று பின்வரும் சவால்களை எதிர்கொள்ளத் தயாராகலாம். தமது அரசுக்கு கணிசமான அளவு ஆபத்து மக்களால் ஏற்படலாம் என்று பல தலைமுறைகளுக்கு முன் அவர்கள் தவறாகக் கணித்திருந்தாலும் இப்போதைய மாபெரும் அகிம்சை வழி பிரச்சாரங்களை அச்சமூட்டுபவையாகப் பாவித்து அவைகளைத் தடுப்பதற்கு அதிகமாகச் செலவழித்துக்கொண்டும் புரூஸ் புயுனோ டி மெஸ்கிடா மற்றும் அலிஸ்டேர் ஸ்மித்தின் ‘டிக்டேட்டர்’ஸ் ஹேண்ட்புக்’-கின் (சர்வாதிகாரியின் கையேடு) விளைவைப் பின்பற்றியும் அல்லது எழுச்சியை வலுவான அடக்குமுறையைத் திணித்தும் அடக்கலாம். ஸ்மித் கல்லூரியில் மத்தியக் கிழக்குக் கல்வி தொடர்பான ‘கெட்சாம் சேர்’ வத்துள்ள ஸ்டீவன் ஹெய்டிமேன் கூறுவது போல் அட்லாண்டிக் கவுன்சில் திட்டத்தில் ‘யதேச்சாதிகாரம் 2.0’ என்பதே ‘வருங்கால யதேச்சாதிகாரம்’ என்பதன் குவிமையமாகும். இரண்டாவதாக, அகிம்சை வழி செயல்பாட்டு முறைகளைக் கையாளும் செயல்பாட்டாளர்கள் உலகெங்கும் உள்ள தமது சமகாலத்தவரிடமிருந்து தவறான பாடங்களைக் கற்றுக்கொள்ள நேரிடலாம். உதாரணமாக, டுனீசியாவில் 2010, 2011ஆம் ஆண்டுகளில் நிகழ்ந்த மாபெரும் போராட்டங்கள் பற்றிய செய்தித் தொகுப்பைப் பார்க்கும் சிலர் ஒரு சர்வாதிகாரியைப் பதவியிறக்கம் செய்ய மூன்று வாரப் போராட்டங்களே போதும் என்ற முடிவுக்கு வரலாம். டுனீசியாவில் சமீப காலங்களில் தொழிலாளர் செயல்பாடு தனித்துவமாக, வலுவானதாக, ஒருங்கிணைந்ததாக இருந்தது என்பதையும், மக்கள் எழுச்சிக்கு இவ்வியக்கம் உதவியதையும், பொது வேலைநிறுத்தம் டுனீசியப் பொருளாதாரத்தை முடக்கும் நிலைக்குத் தள்ளியதையும், தொழிலதிபர்கள் ஜனாதிபதி ஜைன்-எல்-அபிடின் பென் அலிக்கான ஆதரவைத் திரும்பப்பெற ஆரம்பித்ததையும்

கிளர்ச்சியாளர்களைத் தானியங்கி ஆயுதங்களைக் கொண்டு அடக்குமாறு அவர் இட்ட ஆணையைப் பாதுகாப்புப் படைகள் மீறியதையும் இப்புரிதல் யாருக்கும் தெரிவிக்காது.

தமது போராட்டம் போன்ற பிற போராட்டங்களினால் செயல்பாட்டாளர்கள் உந்தப்படுவது இயல்பான ஒன்று; ஆனால் இது பெரும்பாலும் தோல்வியில் முடியலாம். உதாரணமாக டெக்ஸாஸ் பல்கலைக்கழகத்தின் கர்ட் வேலாண்ட் கூறுவதைப் பார்க்கலாம்: 1848-ம் ஆண்டு உலகெங்கும் வன்முறைப் புரட்சிகள் எழுந்தபோது பிரெஞ்சு அரசுக்கெதிராக ஆரம்ப எழுச்சியை அதிருப்தியாளர்கள் மீண்டும் நடத்த முயன்ற சமயத்தில் ஏற்கனவே திட்டமிட்டிருந்த, தயாராக இருந்த மன்னர்கள் அக்கிளர்ச்சியைத் தம் ஆதாரங்களினால் முறியடித்தனர்; அவர்கள் வேறு விதமான எதிரிகளாக ஆகிவிட்டிருந்தனர். பிற்கால எழுச்சிச் சமயத்தில் இவ்வரசுகள் எழுச்சியாளர்களின் போராட்டங்களை முன்கூட்டியே கணித்து அடக்கி எதிரிகளைத் தமக்குச் சாதகமாகப் பிரித்துவிட்டன. இன்றும் இவ்வாறான இயங்குமுறைகளைப் பிராந்திய எழுச்சிகளின்போது நம்மால் பார்க்க முடிகிறது.

**3. நம்பினால் நம்புங்கள்: இன்றும்கூட, வன்முறைப் போராட்டங்களைவிட அகிம்சை வழிப் பிரச்சாரங்கள்தான் அதிக வெற்றியைப் பெறுகின்றன.**

1960ஆம் ஆண்டு முதல் வன்முறைப் பிரச்சாரங்களைவிட அகிம்சை வழிப் பிரச்சாரங்களே அதிக வெற்றி விகிதத்துடன் உள்ளன. சராசரியாகப் பார்த்தால் 1900 முதல் 2015 வரை, அகிம்சை வழிப் பிரச்சாரங்கள் 51% வெற்றியையும், வன்முறைப் பிரச்சாரங்கள் 27% வெற்றியையும் பெற்றுள்ளன. இன்றுவரை இத்தலைமுறையில் அகிம்சை வழிப் பிரச்சாரங்கள் 30% வெற்றியையும், வன்முறைப் பிரச்சாரங்கள் 12% வெற்றியையும் பெற்றுள்ளன: இவ்விரு வெற்றிகளின் விகிதாச்சார இடைவெளியானது சராசரியைவிட அதிகமாகும்.

**4. அகிம்சை வழி இயக்கத்துக்கு வன்முறை 'இறக்கை' தேவையில்லை.**

2011 முதல் இன்றுவரை அதிக அளவில் விவாதம் நடத்தப்பட்டுவரும் ஒரு தலைப்பு இதுதான்: 'அகிம்சை வழி இயக்கப் போராட்டத்தில் அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சில வன்முறைச் செயல்கள் இருந்தால் போராட்டத்துக்கு அது உதவி புரியுமா, புரியாதா' என்பதே அது. இக்கேள்வி 'வேற்றுமை உத்திகள்' என்ற தலைப்பில் அமெரிக்காவில் அடிக்கடி விவாதிக்கப்படுகிறது. மாற்றத்துக்கான இயக்கம் எதுவானாலும் அகிம்சை / வன்முறை / கலவையான விவாதங்கள் இருப்பது தவிர்க்க இயலாதது. பார்வையாளர்கள், விமர்சகர்கள், செயல்பாட்டாளர்கள் எப்படிக் கூறினாலும் (ஆதாரவாகவும் எதிராகவும்) சமீப காலம் வரை இக்கேள்வி மீதான சோதனை ரீதியான ஆய்வு எதுவும் நடத்தப்படவில்லை.

Mobilization (http://mobilizationjournal.org/doi/abs/10.17813/1086-671X-20-4-427?code=hjdm-site) என்னும் இதழில் எழுதிய சமீபத்திய கட்டுரையில் ரட்ஜர்ஸ் பல்கலைக்கழகத்தின் செனோவெத் மற்றும் கர்ட்

ஷாக் ஆகியோர் குறைந்தபட்ச வன்முறையைப் பிரயோகிப்பது பற்றிய ஆய்வின் ஒப்பீட்டு விவரங்களைப் பயன்படுத்தினர். ஊடகக் கவனம், சுய பாதுகாப்பு பற்றிய அனுமானம், குறிப்பிட்ட பிரிவினரின் ‘எல்லைமீறும்’ எதிர்மறை பண்பாட்டைப் பரப்புவது போன்ற சில குறுகிய காலக் குறிக்கோள்களை மட்டுமே வன்முறைப் பிரயோகத்தால் அடையலாம். ஆனால் பரவலான, பல்வேறான மக்களின் பங்கேற்பு, மூன்றாவது சாராரின் ஆதரவு பெருகுதல் மற்றும் பாதுகாப்புப் படையினரின் நம்பிக்கை நிலையில் மாற்றம் ஏற்படுத்துதல் போன்ற நீண்டகால வியூகக் குறிக்கோள்களை இது சரிவரப் பார்ப்பதில்லை. உள்ளூர் மக்கள் குறைந்த அளவில் பங்கேற்கும் போராட்டங்கள் வன்முறையாக மாறுவதற்கான சான்று கிடைத்துள்ளது; அகிம்சை வழிப் பிரச்சாரங்களால் மட்டுமே ஆதாயம் கிட்டுமென்ற முதல் குறிக்கோளே இதில் அடிபட்டுவிட்டது. இதேபோன்ற வேறொரு ஆய்வானது வன்முறைப் போராட்டங்களால் அரசின் அடக்குமுறை அதிகமாவதையும், அதனால் மக்களின் பங்கேற்பு குறைவதையும் கண்டுபிடித்துள்ளது. எனவே, அகிம்சை வழிப் பிரச்சாரங்கள் வெற்றியடைய வன்முறை வழிப் போராட்டங்கள் ஒருபோதும் உதவுவதில்லை.

அகிம்சை வழி மற்றும் வன்முறைப் போராட்டங்களின் அரசியல் விளைவுகள் பற்றிய ஆதாரங்களை பிரின்ஸ்டன் பல்கலைக்கழகத்தின் ஓமர் வாஸோ குறிப்பிடுகிறார். 1960களில் கறுப்பு அமெரிக்கர்கள் நகரங்களில் மேற்கொண்ட போராட்டத்தைச் சுட்டிக்காட்டும் வாஸோ, அமெரிக்காவைப் பொறுத்தவரை அதிக அளவு அகிம்சை வழிப் போராட்டங்கள் பொதுமக்களின் கவனைத்தைக் கவரும் அடிப்படைப் பிரச்சினையாக ’மனித உரிமையை’ மாற்றியதையும் அதிக அளவு வன்முறைப் போராட்டங்கள் ‘சட்டம் ஒழுங்கை’ அடிப்படைப் பிரச்சினையாகப் பார்க்கும் கண்ணோட்டத்தை வளர்த்ததையும் ஆணித்தரமாக நிரூபிக்கிறார். 1965-க்குப்பின் வன்முறைப் போராட்டங்கள் பரவலானதால், மனித உரிமைக்கான ஆதரவிலிருந்து காவல்துறை நடவடிக்கை பற்றி விமர்சிப்பது என்று மக்களின் ஆதரவு திசைமாறியது; வலுவான தூண்களான மக்களின் ஆதரவைப் பெற இவ்வகைப் போராட்டங்கள் தவறிவிட்டதையே இது காட்டுகிறது. எனவே, குறுகிய காலப் போராட்டங்களைப் போல, நீண்ட காலப் போராட்டங்களுக்கும் மக்களின் ஆதரவு கட்டாயம் தேவை. ‘சட்டம் ஒழுங்கிற்கான’ ஆதரவானது குடியரசுக் கட்சிக்கான ஆதரவுடன் மிகவும் தொடர்புடையதாகக் கண்டறிந்த வாஸோ, அமெரிக அரசியலில் பல்வேறான அரசியல் போராட்டங்கள் எப்போதும் தாக்கத்தை ஏற்படுத்தியதாக கூறுகிறார்.

## 5. அகிம்சை வழிப் போராட்டங்கள் நிகழப்போவதை முன்கூட்டியே கணிப்பது மிகவும் கடினம்

சமூக இயக்கங்கள் (அ) போராட்ட இயக்கங்கள் எப்போது தோன்றும் என்ற கேள்வியே சமூகவியல் களம் முழுவதிலும் நிரம்பியுள்ளது. அதீதமான அகிம்சை வழி போராட்டங்கள் சற்று வித்தியாசமானவை; தேசிய அளவில் இருக்கும் நிலவரத்தை நீடிக்கச் செய்யும் குறிக்கோளுடன் அதிகத் தடைகளை ஏற்படுத்தி எடுக்கப்படும் ஒருங்கிணைந்த முயற்சிகள்

இவை. அகிம்சை வழிப் எதிர்ப்புக்கான காரணத்தை ஆய்வு செய்தபோது தொழிலுற்பத்தித் துறையின் பெருக்கம் (பட்சர் & ஸ்டீவென்ஸன், 2014), உணர்ச்சிகள் (பேர்ல்மேன், 2013), புவியியல் நில அமைப்பில் நெருக்கம் (க்ளெடிச் & ரிவேரா, 2015) மற்றும் போராட்ட வரலாறு (ப்ரேத்வைட், ப்ரேத்வைட் & குபிக், 2015) போன்ற பல்வேறு காரணிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

பல்வேறு மக்கள் கிளர்ச்சிகளை 2015-ல் மதிப்பீடு செய்த செனோவெத்தும் ஜே உல்ஃபெல்டரும் வன்முறைப் போராட்டங்களை முன்கூட்டியே கணித்தவர்கள் ஒரு சிலர்தான் என்றனர். கற்றறிந்தோரால் எளிதில் அனுமானிக்கக்கூடிய ஆயுதமேந்திய புரட்சி, அதிரடிப் புரட்சி, போராட்டம் போன்றவை அன்றி மக்கள் அதிகளவில் பங்கேற்கும் அகிம்சை வழிப் போராட்டங்கள் எப்போதும் எங்கும் எக்காரணத்துக்காகவும் நிகழலாம். போராட்டம் நிகழ்வது கடினம், மக்களை ஒன்று சேர்த்து அதிருப்தியை ஒன்று திரட்ட முடியாதது என்று சான்றோர் கணிக்கும் இடங்களில் இப்போராட்டம் அதிக அளவு நடைபெறும். எதனால் இவ்வாறு நிகழ்கிறது என இன்றுவரை யாருக்கும் தெளிவாகப் புரியவில்லை. மக்கள் சக்தி இயக்கங்கள் அவசியமாகவும், விஷயத்தைப் பொறுத்தும் நிகழும் என்பதால் அவற்றிற்கான காரணங்களை வழக்கமான உபகரணங்களான முன்கூட்டியே அறிவிக்கும் கருவிகள் மற்றும் தகவல் கட்டமைப்புகளால் கண்டறிய முடியவில்லை. அகிம்சை வழிக் கிளர்ச்சிகளை நடத்துபவர்கள் பெரும்பாலும் எதிர்ப்பை மீறி ஆக்கபூர்வமான முறையில் செயல்படுவாதால் இவை வெற்றி பெறுகின்றன என்று இக்கண்டுபிடிப்பை வேறு விதமாகவும் சொல்லலாம்.

**6. அதிருப்திப் பிரச்சாரங்கள் அனைத்தையும் அடக்குமுறை (ஆட்சி) அடக்க நினைத்தாலும் அகிம்சை எதிர்ப்புகளின் தேர்வையோ அல்லது முடிவையோ முன்கூட்டியே தீர்மானிப்பது கடினம்**

எதிரி நல்லபடியாக நடந்துகொண்டால்தான் இது வெற்றியடையும் என்பது அகிம்சை வழி எதிர்ப்பு பற்றிய பொதுவான விவாதத்தில் முக்கியமாகச் சொல்லப்படுவது. ஆனால், எதிரி கையுறையைக் கழற்றும் அத்தருணத்திலேயே அகிம்சை வழி எதிர்ப்பு மேற்கொண்டு நடத்த முடியாமலோ வீணாகவோ போய்விடலாம். 2011-ல் வெளியிட்ட புத்தகத்தில் இதுபற்றிக் கூறியிருந்தோம்; ஆனால் சமீபத்தில் நடத்தப்பட்ட சில ஆய்வுகளும் இம்முக்கிய கேள்வியைப் பற்றித் தகவல்கள் பல தந்துள்ளன.

கொடூரமான அடக்குமுறை உத்திகளால் அகிம்சை வழி எதிர்ப்புகள் உருவாகும் சாத்தியக்கூறு பிறக்கலாம் என வெண்டி பேர்ல்மேன் பாலஸ்தீன தேசிய இயக்கம் பற்றிய தனது அற்புதமான புத்தகத்தில் குறிப்பிடுகிறார்; இயக்கம் அகிம்சை வழி எதிர்ப்பிலிருந்து வன்முறைக்கு மாறியது எப்படி என்பதற்கான காரணங்களை அடக்குமுறையாளர்களால் மட்டும் தந்துவிட முடியாது என புத்தகத்தில் சொல்லப்பட்டுள்ளது. வன்முறைக் காலத்தில் இருந்ததைப் போன்றேதான் முதல் ‘இண்டிஃபாடாவின்’ இயக்க அகிம்சை வழி எதிர்ப்பின்போதும் அடக்குமுறை

தலைவிரித்தாடியது. பங்கேற்பின் அளவே வன்முறைக்குக் காரணமாக இருந்திருக்கலாம் என்பதே அவரது வாதமாகும். ஒட்டுமொத்த லட்சிய நோக்கு, தலைமை மற்றும் தெளிவான கோட்பாடுகள், விதிகள் அவ்வியக்கத்திற்கு இருந்தபோது இஸ்ரேல் அரசின் இடைவிடாத அடக்குமுறைக்கு மத்தியிலும் அகிம்சை வழி எதிர்ப்பை அது காட்டி வந்தது. ஜோனாதன் சட்டன், சார்லஸ் பட்சர் மற்றும் ஐஸாக் ஸ்வென்ஸன் போன்ற ஆய்வாளர்கள் அடக்குமுறையினூடே பிரச்சாரத்தின் தன்மையைச் சோதிக்கும் காரணியாக இயக்கத்தின் கட்டமைப்பு மற்றும் அமைப்பையே சுட்டிக் காட்டுகின்றனர். பெருமளவிலான தகவல் மையத்தைக் கொண்டு, ஆயுதமற்ற போராட்டத்தைக் கட்டுப்படுத்த அரசு ஒருமுக வன்முறையையோ அல்லது பெருமளவிலான படுகொலைகளிலோ ஈடுபட்டால், பெருமளவிலான ஒருங்கிணைந்த பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ள போராட்டவாதிகள் தமது போராட்டத்தில் நீண்டகால அளவில்தான் வெற்றி பெறுவார்கள். மேம்பட்ட அடக்குமுறை அரசுகளை - குறிப்பாக பெரும் இனப் படுகொலைகள் / அரசியல் கொலைகளைப் புரியும் ஆட்சியாளர்களை அகிம்சை வழி எதிர்ப்பாளர்களால் சுலபமாக எதிர்க்க முடியாது. 1975-1985 வரையிலான பத்தாண்டுக் காலத்தில் கிளர்ச்சியில் ஈடுபட்ட இடதுசாரி அமைப்பினரை குவாடிமாலா நாட்டின் பாதுகாப்புப் படைகள் திட்டமிட்டு அடக்கிய விதத்தை சமீபத்தில் ஆராய்ந்த கிறிஸ்டோஃபர் சலிவனின் ஆய்வானது அத்தகைய அரசுகளின் வசமிருக்கும் நவீன வசதி, ஈடுபாடு பற்றிய ஒரு எச்சரிக்கைச் செய்தியாகும். இதேபோல் 2001 மார்ச் மாதத்தில் சிரியாவின் பஷார்-அல்-அசாத் அரசானது அகிம்சை வழி எதிர்ப்பாளர்களைத் திட்டமிட்ட, கொடூரமான முறையில் டெரா நகரத்தில் படுகொலை செய்தது; இதிலிருந்து, அகிம்சை வழிப் போராட்டங்களின் வெற்றி விகிதமும் தோல்வி விகிதமும் கிட்டத்தட்ட ஒன்றாக இருக்கக்கூடும் என்கிற அச்சுறுத்தும் உண்மையும் புரிகிறது.

மாபெரும் மக்கள் கிளர்ச்சியின் பின்னணியில் அடக்குமுறை ஆட்சியாளர்கள் எவ்வாறு தனது ஊழியர்களிடமிருந்து முழு விசுவாசத்தை எதிர்பார்ப்பார்கள் என்பதை அனுமானிப்பது கடினமே; சிரியா போன்ற நாடுகளில் இது முற்றிலும் சாத்தியமற்ற ஒன்று. லீ ஸ்மிதி, லெஸ்டர் கர்ட்ஸ் மற்றும் சிலர் வெளியிடப்படாத தமது புத்தகத்தில் ஆயுதமேந்தாத கிளர்ச்சியாளர்கள் மீது வன்முறையை ஆட்சியாளர்கள் பிரயோகித்தால் அது அவர்களுக்கே மீண்டும் திரும்பக்கூடும் என்று கூறியுள்ளனர்; அதாவது, தார்மீக அவமானமாக அது பார்க்கப்படுவதுடன் முன்பைவிட மக்களின் பங்கேற்பு அதிகரிக்கும் வாய்ப்பு, இயக்கத்திற்கான மூன்றாவது தரப்பின் ஆதரவு, பாதுகாப்புப் படையினர் கட்சிமாறும் நிலை ஆகியவை இதன் விளைவுகளாக நிகழலாம். சொல்லப் போனால் இப்போராட்டத்தால் இவ்வகை அரசுகள் அழிகிறதோ இல்லயோ, அகிம்சை வழிப் போராட்டங்கள் உருவாகக் காரணமே இந்த அடக்குமுறை அரசுகள்தான். எம்மெட் டில்லின் கொலையை இங்கு உதாரணம் காட்டலாம்: அந்தக் கொடூரமான வன்முறையின் காரணமாகத்தான் அமெரிக்க குடிமைச் சமூகத்தினரின் உரிமைப் போராட்டத்திற்கு ஆதரவும், அனுதாபமும், மக்கள் பங்கேற்பும் மிகப் பெரிய அளவில் கிடைத்தது.

மார்ட்டின் லூதர் கிங் (ஜூனியர்) தினம் கொண்டாடப்படும் இந்நந்நாளில் அவரது ‘ஒரு பர்மிங்ஹாம் சிறையிலிருந்து வரும் கடிதம்’ என்ற புத்தகத்தின் எண்ணத்தைத் தூண்டும் ஒரு சில பத்திகளைக் கீழே தருகிறோம் (முழுக் கடிதமும் https://www.africa.upenn.edu/Articles_Gen/Letter_Birmingham.html என்ற இணையதள முகவரியில் உள்ளது):

“என் நண்பர்களே, ஸ்திரமான சட்டரீதியான, அகிம்சை வழி அழுத்தம் இல்லா விட்டால் மனித உரிமைப் போராட்டத்தில் இம்மியளவு கூட நமக்கு லாபம் கிட்டியிருக்காது. கொடுமை என்னவென்றால், வசதி படைத்த பிரிவினர் தமது வசதியான வாழ்வு/உரிமைகளை விட்டுக்கொடுப்பது மிக அரிது என்பது ஒரு வரலாற்று உண்மையாகவே ஆகிவிட்டது. தனிநபர்கள் தார்மீக அடிப்படையில் தாமாக முன்வந்து அவ்வாறு செய்யக்கூடும்; ஆனால், ரீனோல்ட் நெய்பர் நமக்கு நினைவூட்டுவதுபோல் தனிநபர்களைவிட குழுக்கள் / பிரிவினர் தார்மீக ரீதியில் அவ்வளவாகச் செயல்படுவதில்லை. அடக்குமுறையாளர்கள் தானாக சுதந்திரம் தருவார்கள் என்பது எப்போதும் நடக்காது என்பதை வேதனையான அனுபவங்களின் மூலம் நாங்கள் கண்டுள்ளோம்; ஒடுக்கப்பட்டோரின் அதைக் கேட்டுப் போராடிப் பெறவேண்டியுள்ளது.”

அகிம்சை வழி எதிர்ப்புக்களின் தார்மீக, நடைமுறைப் பரிமாணங்கள் பற்றிய அக்கறை கிங்குக்கு இருந்தது. ஆனால், பர்மிங்ஹாம் கடிதம் பற்றி ஜோனதன் ரீடர் எழுதியுள்ள புத்தகத்தில் உள்ளது போல, கிங்கின் நடைமுறைத்தன்மை குறைத்து மதிப்பிடப்பட முடியாத ஒன்றாகும்.

அகிம்சை வழி எதிர்ப்புக்களைப் பற்றி நாமறிந்து கொள்ள வேண்டியவை பல: இது ஒரு வளர்ந்து வரும் சித்தாந்தமாகும்; இது தொடர்பான ஆராய்ச்சிகள் சமூக அறிவியலிலிருந்தே தோன்றுபவை. பல்வேறு பின்னணிகளில் எப்போது, எவ்விதத்தில் அகிம்சை வழிப் போராட்டங்களை மேற்கொள்ளலாம் என்பது பற்றிய முறையான ஆராய்ச்சிகள் அடக்குமுறை ஆட்சியாளர்களை எதிர்க்கும் மக்களுக்கு ஆதாயமளிக்கும். அகிம்சை வழிப் போராட்டங்கள் எப்பொழுது, ஏன் வெற்றியடைகின்றன, அவற்றைப் பயனுள்ள வகையில் ஆதரிப்பதன் விளைவு என்ன என்பது தொடர்பான ஆழமான புரிதலின் மூலம் தேசம் அடக்குமுறை அரசிலிருந்து பலவீனமான அரசாக மாறும்போது தோன்றும் சவால்களைச் சமாளிக்கத் திணறும் சட்ட நிபுணர்கள் பெரும் ஆதாயம் பெற முடியும்.

முன்பிருந்ததை விட அதிக அளவு அகிம்சை வழிப் போராட்டங்களை மக்கள் கையாளும் இத்தலைமுறையில் மகாத்மா காந்தி, மார்ட்டின் லூதர் கிங் போன்றோரின் நடைமுறை, கொள்கைசார்ந்த எண்ணங்களை ஊன்றிப் படிப்பதன் மூலம் வருங்காலத் திட்டமிடும் நிகழ்முறையில் சான்றோர்களும் சட்டநிபுணர்களும் பெரும் முன்னேற்றங்களைக் காண முடியும்.

*டெனெவர் பல்கலைக்கழகத்தின் ‘ஜோஸஃப் கர்பெல் ஸ்கூல் ஆஃப் இண்டர்நேஷனல் ஸ்டடீஸ்’-ல் பேராசிரியராகப் பணிபுரிபவர் எரிகா செனோவெத். ‘Political Violence @ a Glance’ இணையதள ‘Blog’-ஐச் சேர்ந்து நடத்தி வரும் இவர் ‘The Monkey Cage’ Blog-ற்கும் எப்போதாவது வருகை புரிபவர். U.S. Institute of Peace-ல் மரியா ஜே. ஸ்டீஃபன் முதுநிலை ஃபெலோவாகப் பணிபுரிகிறார்; அட்லாண்டிக் கவுன்சிலிலும் இவர் இதே பதவியில் இருக்கிறார்.*

**